**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.140/2020**
**Prosecution Witnesses: 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சுமதி** | Caste | : |
| Father Name/ Husband Name | : **சித்தையன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(28.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் குற்றபிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகவும் அயல்பணியாக மாண்புமிகு உயர் நீதிமன்றம் மதுரைக்கிளையில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். இதற்கு முன்பு திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் 18.09.2018 அன்று வட்டக் காவல் ஆய்வாளராக பொறுப்பு பணியில் இருந்த போது குற்ற எண் 257/2018 என்ற பிரிவு 279, 304(எ) என்ற வழக்கில் சார்பு ஆய்வாளர் சரவணன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு விசாரணைக்காக என்னிடம் அனுப்பப்பட்ட வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே நாள் சாட்சிகள் சுந்தரபாண்டியன், கார்த்திக் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 7 மணியளவில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது. அதன் பின்பு சாட்சிகள் யோகராணி, கனிராஜன், ஆரோக்கியராஜ் மற்றும் மகசர்

சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே நாள் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் வைத்து காலை 11 மணியளவில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் மரகதவேல் என்பவரது பிரேதத்தின் மீது விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியிடு செய்யப்படுகிறது. தலைமைக்காவலர் சிவக்குமார் என்பவரது மூலம் மரகதவேல் என்பவரது சடலத்தின் மீது சடலக்கூராய்வு செய்வதற்காக வேண்டுகோள் கடிதத்துடன் மருத்துவர் ஜெனிலியா ஜெபாஸ்டியன் என்பவரிடம் ஒப்படைத்தேன். விபத்தில் சம்பந்தமான TN 67 BF 5810 என்ற காரை மோட்டார் வாகன ஆய்வுக்காக வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பினேன். அதன் பின்பு 24.09.2018 அன்று காவல் நிலையத்தில் ஆஜரான எதிரி திலீப்பை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். அதன் பின்பு சார்பு ஆய்வாளர் சரவணக்குமார் தலைமைக்காவலர் சிவக்குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். தாலுகா காவல் நிலையத்திற்கு ஆய்வாளர் பணிக்கு அறிக்கை செய்ததால் பொறுப்பு பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு வழக்கு கோப்பினை அதற்கு அடுத்து வந்து காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதி 17.09.2018 மதியம் 3.50 என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை நான்கு வழி பாதை என்றால் சரிதான். விபத்துக்குள்ளான கார் சாலையில் கவிழ்ந்துவிட்டதாக தெரிந்துகொண்டேன்.சம்பவம் தொடர்பாக மறுநாள் காலை புகார்தாரர் 6 மணிக்கு புகார் கொடுத்த பின்பு தான் எனக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே சார்பு ஆய்வாளர் சம்பவயிடத்திற்கு சென்றுவிட்டார். அதுதொடர்பாக எனது வழக்கு ஆவணங்களில் துலங்குமா என்றால் துலங்காது. சார்பு ஆய்வாளர் என்னிடம் எந்த அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை. வாய்மொழியாக கூறினார். அதையும் நான் வழக்கு ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாலையில் விபத்துக்குள்ளான கார் சென்று கொண்டிருக்கும் போது முன்னே சென்ற ஒரு பைக்கானது மாடு குறுக்கே வந்துவிட்டதால் மேற்படி பைக்கானது

திடீரென வலதுபுறம் ஏறியதால் அந்த இருசக்கர வாகனத்தில் மோதாமல் இருப்பதற்காக எதிரி கவனமாக செயல்பட்ட போது கார் செண்டர் மீடியனில் மோதி டயர் வெடித்து கவிழ்ந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் விசாரித்த சம்பவ சாட்சிகளும் கேள்விபட்ட சாட்சிகளும் இருசக்கர வாகனத்தில் மோதுவதை தவிர்ப்பதற்காக வலது திருப்பியபோது காரின் முன்பக்க டயர் வெடித்து சென்டர் மீடியனில் மோதிவிட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். எதிரி கவனமுடன் செயல்பட்டும் இருசக்கர வாகனத்தில் மோதாமல் இருக்க செயல்பட்ட போது தெய்வாதினமாக ஏற்பட்ட விபத்து என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எதிரியின் கவனக்குறைவு காரணம் அல்ல. விபத்து வாகனத்தில் வந்த நபரிடம் புகார் பெற்றதை மறைத்து வழக்கிற்கு சாதகமாக சம்பவத்தை பார்க்காத அ.சா.1 னிடம் புகாரை பெற்று சரியான முறையில் புலன் விசாரணை செய்யாமல் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை